**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 11.11.2025**

**OS. No. 196/2010**

**வழக்கு சாட்சி PW.1–முத்துகிருஷ்ணன், த/பெ. குப்புசாமி**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் வில்பட்டியில் பிறந்ததுமுதல் வசித்து வருகிறேன் . S.P.வேலுச்சாமி எனது அப்பாவின் தம்பி , எனக்கு சித்தப்பா ஆவார். அவர் தற்போது உயிருடன் இல்லை , அவர் 03.12.2008ம் தேதி காலமாகிவிட்டார். ஆனால் எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதிலும் 12.03.2008ம் தேதி இறந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் தாவா சொத்து எனது சித்தப்பா வேலுச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல , எங்களது குடும்பச்சொத்தாகும். பட்டா, அடங்கல் வேலுச்சாமி பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான் . செட்டில்மெட் பட்டா மூலமாக தாவா சொத்து வேலுச்சாமிக்கு பாத்தயமானது என்றால் சரிதான் . தாவா சொத்து தொடர்பாக வேலுச்சாமி 1ம் பிரிதிவாதிக்கு பதிவு செய்யப்பட்டு பொது அதிகார ஆவணம் ஒன்றை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுகுறித்த விபரம் எனக்கு தெரியாது, ஆனால் அவர் இறந்தபிறகு தான் அந்த விபரம் எனக்கு தெரியவந்தது. அந்த பொது அதிகார ஆவணமானது 1997ல் பதியப்பட்டது என்றால் சரிதான்.

அந்த பொது அதிகார ஆவணத்தின் தாவா சொத்து தொடர்பாக சர்வே எண்.1316/5 என்பது 55 சென்ட் விஸ்திரண நிலத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் . அந்த அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி 28 சென்ட் நிலத்தை ஆவணம் பதியப்பட்டதற்கு மறுநாள் வீரராகவன் என்பவருக்கு மாற்றாக்கம் செய்துள்ளார் என்றால் சரிதான் . அந்த விபரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . வீரராகவனுக்கு சொத்து

மாற்றாக்கம் செய்தது தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் அதிகாரம் கொடுத்த விபரம் 2008ல் தான் எனக்கு தெரியவந்தது. மேற்சொன்ன பொதுஅதிகார ஆவணத்தின் அடிப்படையில் 28 சென்ட் நிலம் மாற்றாக்கம் செய்தது போக மீதி உள்ள இடத்திற்காகதான் இந்த வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மீதி உள்ள சொத்திற்கு சம்பந்தமாக 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியிடம் 2004ல் கிரைய உடன்படிக்கை ஆவணம் ஒன்று ஏற்படுத்தினார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது.

அந்த கிரைய உடன்படிக்கையின் பேரில் 2007ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் அந்த விபரம் பத்திர அலுவலகத்தில் விசாரணையில் பின்னர் தெரியவந்தது. எனது சித்தப்பா வேலுச்சாமி 1ம் பிரதிவாதிக்கு கிரையத்தொகையை ரூ .85,000/- பெற்றுக்கொண்டு உடனடியாக கிரைய ஆவணம் எழுத முடியாத காரணத்தால் பொது அதிகார ஆவணம் கொடுத்துள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது . பொது அதிகார ஆவணம் பதிந்தபோதே வேலுச்சாமி 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல , எங்கள் வசம்தான் உள்ளது. தற்சமயம் தாவா சொத்து தொடர்புடைய வருவாய் ஆவணங்கள் 2ம் பிரதிவாதி கலா கோமாஷ் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

வேலுச்சாமி இறந்தபின்பு 1ம் பிரதிவாதிக்கு மேற்சொன்ன வேலுச்சாமி இறந்தது குறித்து தெரியப்படுத்தி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் 2010ல் அனுப்பினேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள். வேலுச்சாமியின் இறப்பு சான்றிதழ் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.4 ஆவணம் வேலுச்சாமியின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான் , அதில் வேலுச்சாமி 12.03.2008 ல் இறந்ததாக காட்டப்பட்டுள்ளது . வேலுச்சாமி இறந்த பின்பு அவரது வாரிசு நான்தான் என்று

காட்டுக்கூடிய ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் வேலுச்சாமி 12.03.2013 ல் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் , வட்டாச்சியர் அலுவலகத்தில் எழுத்துப்பிழை காரணமாக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள இறப்புச்சான்றிதழிலும் , வாரிசு சான்றிதழிலும் வேலுச்சாமியின் இறப்பு தேதி வேறுப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்தை எனது கூட்டுக்குடும்ப சொத்தாக அனுபவம் செய்து வருகிறேன் என்று எனது பிராதில் சொல்லியுள்ள நிலையில் அதைக்காட்டக்கூடிய ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . கூட்டுக்குடும்ப சொத்தாக இருந்திருந்தால் வேலுச்சாமி 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் வழங்கியபோதே நான் ஆட்சேபனை தெரிவித்திருப்பேன் என்றாலும், அத்தகைய செயல் எதுவும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல . கூட்டுக்குடும்ப சொத்தாக இருந்திருந்தால் வேலுச்சாமி பெயரிலும் , எனது அப்பா பெயரிலும் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றால் குடும்பத்தில் ஒரு நபருக்குதான் பட்டா வழங்கப்படும் என்பதால் எனது சித்தப்பா பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 2 மற்றும் 3 வாதிகள் சேதுராமன், மீனாட்சி எனது தம்பி மற்றும் தங்கை ஆவார் . 1, 2 பிரதிவாதிகள் திண்டுக்கல்லில் உள்ளதாக எனது பிராதில் சொல்லியுள்ளேன் . அவர்கள் திண்டுக்கல்லில் உள்ளதாகதான் தெரியும்.

வேலுச்சாமி இறந்த விபரம் 1, 2 பிரதிவாதிகளுக்கு நேரடியாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி , 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து ஒரு வருடத்திற்கு பிறகுதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான் , அப்போதுதான் அந்த விபரம் தெரியவந்தது . வேலுச்சாமி 1ம் பிரதிவாதியிடம் கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து தாவா சொத்தின் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டார் என்றாலும், அதை ஆட்சேபனை

செய்ய வேலுச்சாமியின் நேரடி வாரிசுகள் இல்லாத நிலையில் அவரது சொத்து மாற்றாக்கம் தொடர்பாக நாங்கள் ஆட்சேபனை செய்ய எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல . இந்த வழக்கு தாக்கல் செய்ய எங்களுக்கு எந்தவிதமான வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல . பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

**(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையானது 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட து )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.11 16:47:17 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.